https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சுந்தரராமசாமி, ஜெயமோகன்; சிறுகதைப் படைப்புக்களில் புலப்பாட்டு உத்திகள்

**மு. கார்த்திகைச்செல்வி**
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்)
பாரதியார் பல்கலைக்கழகம், கோவை – 641046

**முனைவர் மா. ஜாஸ்மின்பிரியா**
ஆய்வு நெறியாளர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்
ஏ.ஜே.கே கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 641105

**ஆய்வுச்சுருக்கம்**

*சிறுகதைப் படைப்பாளிகள், வாசகர்களுக்குத் தாம்சொல்லவந்த கருத்துக்களை வெளிப் படுத்தும் முறையே* (Methods of Presentation) *சிறுகதைப் புலப்பாட்டு உத்திகளாகும். இதில் சிறுகதைப் படைப்பிலக்கியம் சார்ந்த பல்வேறு கலைத்திறன்களும், தொழில் நுட்பக் கூறுகளும்* (Artistic Creation and Technical Empowerment) *இடம்பெற்றுள்ளன. படைப்பிலக்கியங் களில் புலப்பாட்டு உத்திகளின் தொன்மையும் அதன் தேவையும்* ***“ஒத்த காட்சி உத்திவகை விரிப்பின்”*** *(தொல்காப்பியம், பொருளதிகாரம் மரபியல், நூற்பா. 1610) என்னும் தொல்காப்பிய நூற்பாவில் விளக்கிக் கூறப்பெற்றுள்ளன. சிறுகதைப் படைப்பாளிகள் தம் வாழ்க்கை அனுபவங்களைக் கலையுணர்வுடன் சிறுகதைகளாகப் படைக்கின்றனர். அக்கதைகளில் பல்வேறு வாழ்க்கை அனுபவங்கள் இடம்பெறுகின்றன. சிறுகதைகளில் கலையுணர்வு என்பது ‘முருகியல் இன்பத்தை’க்* (Aesthetic Pleasure) *குறிக்கும். படைப்பிலக்கியப் புலப்பாட்டு முறைகளில்தான் பல்வேறு வகையான இலக்கியத் தனிச்சிறப்புக் கூறுகளும், படிப்பவர்களுக்கு முருகியல் இன்பமும் கிடைக்கின்றன. இந்த வகையில்; சுந்தரராமசாமியும் ஜெயமோகனும்;;; தம் கலையுணர்வில் தோன்றிய சிறுகதைப் படைப்புக்களை வாசகர்கள் மனம்கொண்டு ஏற்கும் வகையில்; வெளியிட்டுள்ள இலக்கியத்திறன் சார்ந்த அவர்தம் சிறுகதைப் புலப்பாட்டு உத்திகளைத் தக்கசான்றுகளுடன் எடுத்துக்காட்டி ஆராய்ந்து விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.*

**திறன் சொற்கள்**

*வருணனை, கூற்றுமுறை, குறியீடுகள், முருகியல், இன்பம், கலைத்திறன், மரபு*

**முன்னுரை**

*“சுந்தரராமசாமி, ஜெயமோகன்; சிறுகதைப் படைப்புக்களில் புலப்பாட்டு உத்திகள்” என்னும் தலைப்பில் அமைந்த இவ்ஆய்வுக் கட்டுரையில் உத்திகள்-விளக்கங்கள், தமிழ்ச் சிறுகதைகளில் உத்திகள், சுந்தரராமசாமி - ஜெயமோகன் ஆகியோர்; சிறுகதைகளின் தொடக்கங்கள், வருணணைத் தொடக்கங்கள், கூற்றுமுறைத் தொடக்கங்கள், சிறுகதைத் தலைப்புக்கள், கதைமாந்தர்; பெயர்களையே தலைப்புக்களாக அமைத்தல், குறியீடாக*

அமைந்த சிறுகதைத் தலைப்புக்கள், விரிவான ஆய்வுக்குப் பிற சிறுகதை உத்திகள்; என்பன குறித்த செய்திகள்; ஆராய்ந்து விளக்கப் பெற்றுள்ளன.

**உத்திகள் - விளக்கங்கள்**

'படைப்பிலக்கியம்' என்பது பல்வேறு வாழ்க்கை அனுபவங்களை உட்கொண்டதாகும். இலக்கியப் படைப்பாளிகள் தம்வாழ்க்கை அனுபவங்களைக் கலையுணர்வுடன்; வெளிப்படுத்து கின்றனர். இங்குக் கலையுணர்வு என்பது 'முருகியல்; இன்பம்' தரும் பல்வேறு வகையான இலக்கியத் தனிச்சிறப்புக்கூறுகளைக் குறிக்கும். தமது கலையுணர்வுகளில்; தோன்றும்; இலக்கியப் படைப்புக்களை வாசகர்கள் மனம்கொண்டு ஏற்கும் வகையில் வெளியிடும்; இலக்கியத் திறன்; சார்ந்த வெளியீட்டு முறைகளே உத்திகள் என்றழைக்கப்படுகின்றன. இலக்கிய வெளியீட்டு முறையான 'உத்திகள்' குறித்த சிந்தனைகள் தொன்மையானதாகும். நூலின்; உத்திகளைத் தொல்காப்பியர்,

**"ஒத்த காட்சி உத்திவகை விரிப்பின்**
**நுதலியது அறிதல், அதிகார வகையே**
**.......**
**இனத்திற் சேர்த்தி உணர்த்தல் வேண்டும்**
**நுனித்தகு புலவர்; கூறிய நூலே"[1]**

என்னும் நூற்பாவில் விளக்கிக் கூறியுள்ளார். நன்னூலாரும் முப்பத்திரண்டு உத்திவகைகளை,

**"நுதலிப் புகுதல்;, ஒத்துமுறை வைப்பே**
**தொகுத்துச் சுட்டல் வகுத்துக் காட்டல்**
**.........................................................................**
**உய்த்துணர வைப்பென உத்தி எண்நான்கே"[2]**

என்னும் நூற்பாவில் வகைப்படுத்திக் கூறியுள்ளார். இந்த நூற்பாக்கள்; படைப்பு இலக்கியங்களின் வெளியீட்டு உத்திமுறைகளை இலக்கிய வெளியீட்டுமுறை நுணுக்கங்களை விளக்கிக் கூறுகின்றன. ஆதலால், படைப்பாளிகள்; தம்படைப்புக்களில்; கையாளும் நுண்ணிய அணுமுறைகள் கொண்ட இலக்கியக் கலைத்திறன்களே உத்திகள் என்பது இவற்றால்; பெறப்படும் செய்தியாகும்.

ஒவ்வொரு இலக்கியப் படைப்பாளியும் தம் இலக்கியப் படைப்புக்களைக் கற்பனைகள் வாயிலாக வகைப்படுத்துவதற்குப் பல்வேறு வகையான இலக்கிய வெளியீட்டு உத்திகளைப் பயன்படுத்துகின்றனர். இதனை க.த. திருநாவுக்கரசு, *"தம்முடைய படைப்புக்கள் கலைப் பெட்டகமாகப் பொலிவதற்குப் படைப்பிலக்கிய ஆசிரியன் சில நெறிமுறைகளைக் கையாளுகின்றான். இவற்றைக் கலைத்திறன் என்னும் பொதுப்பெயரால் சுட்டுவது மரபு. உத்திகள் எனக் குறிப்பிடுவதும்; வழக்கம். இலக்கியப் படைப்புக்களின் வெற்றிக்கும் தோல்விக்கும்; இக்கலைத்திறன்களே காரணங்களாக அமைகின்றன"[3]* எனக் குறிப்பிடுவதிலிருந்து அறியலாம். இலக்கியப் படைப்புக்கள் சமுதாய மாற்றம், காலத்தின் தேவைகளுக்கேற்ப மாற்றம் அடையும்போது அப்படைப்புக்களின் வெளியீட்டு உத்திகளும் மாற்றங்களைப் பெறுகின்றன. இதனை, *"காலந்தோறும்; சமுதாயத்தில் அரும்பும்; அரசியல், பொருளியல், சமூகப் பண்பாட்டு, ஆன்மீக இயக்கங்கள் இலக்கியப் படைப்புக்களின்; நோக்குகளையும் போக்குகளையும்; பாதிக்கின்றன. இதனால் அவற்றில் மாற்றங்களும் வேறுபாடுகளும் உண்டாகின்றன"[4]* என்னும் கருத்துரையால் அறியலாம். சுருக்கமாகச் சொன்னால்; இலக்கியப் படைப்புக்களின் உள்ளடக்கச் செய்திகளின் வெளியீட்டு முறைகளே உத்திகளாகும். இதனை, சி.இ. மறைமலை, *"ஒரு கலைஞன்; (படைப்பாளி) தன் இலக்கியப் படைப்பின்; செவ்விய வெளியீட்டிற்குப் பயன்கொள்ளும்; ஆற்றலும்; ஆக்க முறையுமே உத்தி எனப்படுகின்றது"[5]* எனக் கூறுவதிலிருந்து அறியலாம். இதனை மேலும்; விளக்கும் ந. பிச்சமுத்து, *"தான்கூற வந்த உள்ளடக்கச் செய்தியின் சாரத்தை வெளிப்படுத்தும்முறை"[6]* எனத் துல்லியமாக வரையறுத்துக் கூறியுள்ளார். *ஒருவர் ஒன்றைச் செய்யும்; போது பயன்படுத்தும்; தொழிற்கலை நுட்பக் கூறுகளே உத்தி"[7]* என்னும் சி.சு. செல்லப்பனின் விளக்கமும்; சிறுகதை இலக்கிய உத்திகளுக்குப் பொருந்தும். இந்த விளக்கங்களால் ஒரு சிறுகதை ஆசிரியன் தம்கதைகளில்; வெளிப்படுத்தும் நுட்பக் கூறுகளே உத்திகள் எனத் தெளிவாகின்றன.

**தமிழ்ச் சிறுகதைகளில் உத்திகள்**

கதைமாந்தர் ஒருவரின் பண்பு, அம்மாந்தரின் ஏதெனும்; ஓர் உணர்வுச் சுழிப்பு, ஒரு நிகழ்ச்சி அல்லது ஒரு குறிப்பிட்ட பின்னணி என்பனவற்றுள் ஏதேனும்; ஒன்றினை மட்டுமே அடிப்படையாகக் கொள்ளும்;

கலைவடிவமே சிறுகதை ஆகும். மிகச்சிறிய வடிவிலான சிறுகதைகளில் (சுருங்கிய வடிவம், சொற்கள், தொடர்கள்) ஆழமான சிந்தனைகளைத் தூண்டும் கருத்துக்களை வெளிப்படுத்துதல்; வேண்டும். ஒரு கட்டிடத்தைத் தாங்கும் அடித்தளம் போன்று ஒவ்வொரு சிறுகதையின் உள்ளட க்கப் பொருண்மைகளும் வடிவமைப்புக் கூறுகளா கிய உத்திகளும் அமைகின்றன. இவையிரண் டும்; சிறப்பாக அமைந்த கதைகளே சிறந்த சிறுகதைகளாகும். சிறுகதை உத்திகள் கதைகளின் கருப்பொருள்களைத் தழுவியே இருத்தல்; வேண்டும். இதனை சு. வேங்கடராமன், "சிறுகதை ஆய்வில் பேசப்படும்; ஒவ்வொரு கலைக்கூறும் (கதை இலக்கிய உத்திகள்) கதையில் இடம்பெற வேண்டும் என்பதில்லை. சில கூடியும்; குறைந்தும்; மாறியும் அமைய லாம். ஆனால்; உத்திகளில் மேற்கொள்ளப் படும் ஒவ்வொரு கலைத்திறனும்; கதையின் அடிநாதமாக ஒலிக்கும் கருப்பொருளை விளக்கி எதிரொலிக்கவுண்டும்"[8] என விளக்கிக் கூறியுள்ளார். இந்த வரையறை களில் சுந்தரராமசாமி, ஜெயமோகன் சிறுகதைகளின்; இலக்கிய வெளியீட்டு உத்திகளில் சிலவற்றை எடுத்துக்காட்டி விளக்குவது இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## சிறுகதைகளின் தொடக்கங்கள்

வாசகர்களின் ஆர்வத்தைத் தூண்டி கதை யைப் படிக்க வைக்கும்; வகையில் சிறுகதைகள் ஆர்வநிலைத் தொடக்கங்க ளைக் கொண்டிருக்க வேண்டும். கதைகளின் கருப்பொருள்களைக் குறிப்பாகப் புலப்படுத்தி அதனைப் பற்றிய சிந்தனைகளைத் தூண்டு வதாக சிறுகதைத் தொடக்கங்கள் அமைதலே சிறப்பு, கதாபாத்திரம் ஒன்றின் ஓர் உணர்வு, ஒரு செயல், பண்புநலன் அல்லது ஒரு கருத்து இவற்றுள் எந்த ஒன்றின்; வெளிப்பாடாகச் சிறுகதை அமைகின்றதோ அந்த ஒன்றைப் பற்றிய தாகவே சிறுகதை தொடக்கங்கள் அமைய வேண்டும். இம்முறையில் சுந்தரராமசாமி யின்; கொசு, மூட்டை, பேன் என்னும் சிறுகதை, மனித ரத்தத்தை உறிஞ்சி அகையே உண்ணும் உணவாகக் கொண்டு தலைமறைவு வாழ்க்கையை மேற்கொள்ளும்; கொசு, மூட்டை, பேன் ஆகிய பூச்சியினங் களால் மனிதர்களுக்கு ஏற்படும் தொந்தரவு கள்; பற்றிய ஒரு சிறு ஆராய்ச்சிச் சிறுகதை யாகும். இக்கருத்தை விளக்கும் இச்சிறுகதை யின் தொடக்கம், "கொசு, மூட்டை, பேன் பற்றிய படைப்பு இது. கொசுவைத்தான் கொசு என்று சொல்கிறேன். அதுபோல்; மூட்டையை அதுபோல் பேனை இந்த மூன்று ஜீவராசிகளை மட்டும்; எடுத்துக் கொள்ளக் காரணம் இவை மனித ரதத்தைப் பிரதான உணவாகக் கொண்டி ருப்பவை என்பதால் தான்."[9] என நேரடியாகவே இக்கதையின் கருப்பொருளை விளக்குவதாக அமைந்துள்ளது.

சுந்தரராமசாமி 'மெய்க்காதல்' என்னும் சிறுகதையில் உண்மைக்காதல், காதலிக்கும் பெண்களின் நிலை ஆகியனவற்றை சமூக இருப்புச் சார்ந்து விளக்குகின்றார். இக்கதை யில் வரும் வரதன்; திருமணத்தை விரும்பாதவன், காதலுக்காகவே காதல் என்ற கொள்கையை உடையவன். கல்லூரி மாணவனான வரதன்; பொழுதுபோக்காகப் பலபெண்களிடம்; காதல் விளையாட்டில் ஈடுபடுகின்றான். அவன் தன் வலையில்; அகப்பட்ட ஜோஸ்வின் என்ற இளம் பெண்ணை மனதாரக் காதலிக்கின்றான். ஜோஸ்வின் தந்தை வரதனிடம் தன்மகளைத் திருமணம் செய்துகொள்ள வேண்டியதும் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிடுகின் றான். இக்கருத்தை விளக்கும் இச்சிறுகதை யின் தொடக்கம், "கல்யாணம் என்ற பூதம்; வெளிப்பட்டு அவனை ஓடஓடவிரட்டும் என்று வரதன்; எதிர்பார்க்கவில்லை..... கல்யாணமா? இதற்கு முன்பும் எத்தனை பெண்களைக் காதலிக்கவில்லை அவன்? கணக்கு வழக்கு உண்டா? அப்போதெல் லாம்; இந்தப் பூதம்; கும்பகர்ணசேவை செய்து கொண்டிருந்ததா என்ன? அப்படி யானால் இப்போது மட்டும் என்னவந்து விட்டதாம் அதற்கு?"[10] எனப் பொருத்தமாக அமைந்துள்ளது. ஜெயமோகன் சிறுகதைகளி லும் இத்தகைய ஆர்வநிலைத் தொடக்கங்கள் உள்ளன. பெண்கள் உயர் பதவிகளுக்கு வந்தால் அவர்களிடம்; ஒரு கோணல் மனப் பான்மை இருக்கும். அதிலும்; அழகே இல்லாத பெண்அதிகாரிகள் மிகவும் குரூரமானவர்களாக இருப்பார்கள் என்பதை ஜெயமோகன்; 'பசும்புல்வெளி' என்ற கதையில் வெளிப்படுத்தியுள்ளார்.

'பசும்புல்வெளி' சிறுகதையில் நாற்பது வயது பிரபா என்பவள்; அந்த அலுவலகத்தின்

உயரதிகாரி ஆவாள். அவளுக்குக் கீழ் எம்.பி.ஏ. படித்த ராஜேந்திரன் என்பவன் உதவியாளராக வேலை செய்து வருகின்றான். ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த அவனுக்கு அந்த அலுவலகத்தில் தற்செயலாக வேலை கிடைத்தது. அவனுக்குப் பணி நிரந்தரம் வரும் சமயத்தில்; அவனுக்கு சார்ஜ் கொடுக்கும் நிலை ஏற்படுகின்றது. குமாஸ்தாவும்; கம்ப்யூட்டரும் செய்த சிறிய தவறுக்கு ராஜேந்திரன் பலியாகின்றான். உயரதிகாரி பிரபா அவனிடம் கடுமையாக நடந்து கொள்கின்றாள். இந்தக் கதையின் தொடக்கம் இச்சூழலை விளக்கி, "மதியச் சாப்பாட்டை என் தனியறைக்குள் பிரபாவு டன்; அமர்ந்து சாப்பிடும்போது அவள் குரலை சற்றுத் தாழ்த்தி என்ன விசயம்? ராஜேந்திரனுக்கு ஏதோ சார்ஜ் கொடுத்திருக்கிறதா சொன்னாங்க? என்றாள். என்முகம் இறுகியதை உணர்ந்து உடனே இலகுபடுத்திக் கொண்டு உணவைப் பார்த்தேன். முகத்தைச் சாதாரணநிலைக்குக் கொண்டு வந்த பிறகு சாதாரண ஆபீஸ் விசயம்தான் என்றேன்"[11] என இக்கதையின் மையக்கருத்தையும், கதைநிகழ்வுகளின் நகர்வு களையும் விளக்குவதாக அமைந்துள்ளது.

ஜெயமோகனின் 'ஆயிரங்கால்மண்டபம்' என்ற சிறுகதை தமிழின் சிறந்த சிறுகதை களில் ஒன்றாகும். செண்பகக்குழல் வாய் மொழி என்ற சிறுமியே இக்கதையின் கதை சொல்லி ஆவாள். செண்பகக் குழல்வாய் மொழி தன் சித்திமீது மிகுந்த அன்பும் பாசமும் கொண்டவள். அவளை ஒரு வழுக்கைத்தலை தாத்தாவிற்கு மணம்செய்து வைக்க முயன்றதால் பொருந்தாத் திருமணத்தை விரும்பாத செண்பகக்குழல் வாய்மொழியின் சித்தி தற்கொலை செய்து கொள்கின்றாள். இதனால் செண்பகக்குழல் வாய்மொழி தன் மற்றொரு சித்தியான ராணி, கமலா அத்தை, ராமுமாமா, சிவன் மாமா, ஆனந்தன் மாமா, லதா அக்கா, கோமதி அக்கா ஆகிய தன் குடும்பத்தைச் சேர்ந்த அனைவருமே கெட்டவர்கள் என்ற முடிவுக்கு வந்துவிடுகின்றாள். இந்தக் கதைச் சூழலை விளக்குவதாக, "எல்லாரும் கெட்டவர்கள் என்ற முடிவிற்கு வந்தபிறகு, செண்பகக்குழல் வாய்மொழி ஆயிரங்கால் மண்டபத்திற்கு வந்தாள். அங்குதான் யாருமே இல்லை. பெரிய வட்டமான மண்டபம், படிகளும் வட்டம்தான். மொத்தம் ஏழுபடிகள்"[12]. என இச்சிறுகதை யின் தொடக்கம் அமைந்துள்ளது. இப்பகுதி யில் முக்கியக் கதைமாந்தர் பெயர், கதைத் தலைப்பு, கதைக்கருவின் பின்புலம்; ஆகியன இடம்பெற்றுள்ளன.

## வருணனைத் தொடககங்கள்

"மொழிநடையின் முக்கியக்கூறு வருணை யாகும். சிறுகதைகள் சிறப்புற அமைய வருணனைகள் இன்றியமையாததாக உள்ளன. வருணனைகள் சிறுகதையாசிரியரின் கவித்துவ ஆற்றலைக் காட்டுவதாகவும், சிறுகதையோடு பொருந்தியதாகவும் கற்பவரு க்கு வியப்பூட்டும் முறையிலும் அமைந்திருக்க வேண்டும்"[13] என்பார் மா. இராமலிங்கம். இக்கூற்றிற்கேற்ப சுந்தரராமசாமி, ஜெய மோகன்; ஆகியோரின் சிறுகதைகளில் சில வருணனைகள் சிறுகதைகளின் தொடக்கங் களாக அமைந்து, அவை சிறுகதைகளின் நிகழ்ச்சிகள் அல்லது கருத்துக்களுக்கு தொடர்பு உடையவைகளாக உள்ளன.

சுந்தரராமசாமியின் 'அழைப்பு' என்னும் சிறுகதை பின்வரும்; கவித்துமான வருணனையுடன் தொடங்குகின்றது. இந்த வருணனை சிறுகதைத் தலைப்புடன் தொடங்குகின்றது. "அழைப்பு அத்தனை உக்கிரமாக அதற்குமுன் என்மனவெளியை மோதியதில்லை. அன்று விளையாட்டரங்கில் விட்டுவிட்டு எழுந்து வானவெளியைத் தாக்கும் ஆரவாரம்போல என்மனவெளியில் மோதல்கள் அதிர்ந்தன. சில்லென்ற அருவி உச்சந்தலையைப் பெயர்த்துக் கொண்டிருந்த அந்நேரத்தில் நரம்புகளில் வெந்நீரை ஏற்றியதுபோல் ரத்தம் வெதுவெதுப்படைந்து கொண்டிருந்தது..... மனவெளியில் கற்குழவி போல் விதைகள் தொங்கும் ஒரு எருதின் பீறிட்ட கத்தலைத் தொடர்ந்து எழுந்த சித்திரங்கள்"[14] சுந்தரராமசாமியின் 'கிடாரி' என்னும் சிறுகதையும் வருணனைத் தொடக்க மாக அமைந்துள்ளது, மிகப்பெரிய காம்பௌண்டு அது. கற்சுவர் நடுவில் மிகப் பெரியவீடு, மாடிவீடு, மாடிவீட்டுக் கொல்லையின் இடதுமூலையில் உரக்கிடங் கும் அதையொட்டிக் கன்றுகளை மறிக்க கம்பழிக்கூண்டும் தொழுவமும், தொழுவத்தி ற்கு அடுத்தாற்போலிருந்த அறையைத்தான் கிழவர் தனது வாசஸ்தலமாக்கிக் கொண்டார்."[15] சுந்தரராமசாமி கிடாரி என்னும் இக்கதையில் பெண்ணாகப் பிறப்பதே பாவம் என்னும் கருத்தை

வலியுறுத்துகின்றார். இக்கதையில் வரும் கிழவர் ஆதரவற்ற அனாதை ஆவார். தன் மகளோடு ஒதுங்கிவிட்ட அவரது வாழ்க்கை மாட்டுத்தொழுவத்தின் ஒரு பகுதியைத் தனக்கெனப் பிரித்துக் கொண்டு தனிமைப்பட்டு விடுகின்றது. இக்கிழவர் தனது மருமகளோடு சதாவாக்குவாதம் செய்கின்றார். மனநோயாளிகளிடம் (பைத்தி யங்கள்) அன்பு காட்டவேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்தி ஜெயமோகன் 'வனம்' என்னும் சிறுகதையை எழுதியுள்ளார். இச்சிறுகதை இச்சூழலுக்கேற்ற பின்னணி வருணனைகளுடன் பின்வருமாறு தொடங்குகின்றது.

"விடிந்து சற்றுநேரம் தாண்டிய உடனேயே நோயாளிகளைத் திறந்துவிட்டு விடுவார்கள். அங்கு, புல்வெளியெங்கும் பைத்தியங்கள் உட்கார்ந்திருக்கும், உலவும். எதையோ மறந்து வைத்துவிட்ட பதைப்புடன் அவர் மட்டும் ஆசிரமத் தோட்டத்துக்குப் பின்புறம் துங்கபத்ரா நதியின் கரையோரம் நோக்கி விரைவார். அழுக்குவேட்டி புதர்களில் சிக்கிக்கிழிபட ஓடுவார். நதிக்கரையில் அந்தப் பிரமாண்டமான ஆலமரம் அவருக்கு என்ன தந்ததோ அங்கேதான் அவருடைய தவம் நடந்து வந்தது"16 ஈமச்சடங்கு மற்றும் ஈமச்சடங்கு செய்யும் முறையை மையக் கருத்தாகக் கொண்ட ஜெயமோகனின் 'நதி' என்னும் சிறுகதை அதற்கேற்ற வருணனை களைக் கொண்டு பின்வருமாறு தொடங்கு கின்றது. "ஆறு, பனியில் நனைந்து போய்க் கிடந்தது. அசைவற்றிருந்த நீரைப் பார்த்ததும் உடம்பு சிலிர்த்தது. குளிர் என் உடலைக் கட்டித் தழுவி இறுக்கியது. கைகளை மார்புக்குக் குறுக்காகக் கட்டிக் கொண்டேன். நேரமாகுதே, வைத்தியர், அண்ணாவிடம் தணிந்த குரலில் சொன்னார். அண்ணா பல்தேய்ந்துவிட்டு மீதியிருந்த மாமர இலைத் துணுக்கை வீசினான். குனிந்து வாய்கொப்ப ளித்துவிட்டு சரேலென்று நீரில் பாய்ந்தான் சட்டென்று மௌனம் கலைந்து ஆறு குலுங்கிச் சிரித்தது."[17]

### கூற்றுமுறைத் தொடக்கங்கள்

சிறுகதை ஆசிரியரே கதையைக் கூறுவதாக அமையும் சிறுகதைகளின் தொடக்கங்களே கூற்றுமுறைத் தொடக்கங்கள் ஆகும். இவ் வகைக்கதைகளில் கதாசிரியர் துணைமாந் தராக வந்து, சிறுகதையில் ஒரு கதாபாத்திர மாகப் பங்கேற்று கதைக்குச் சிறப்பூட்டு கின்றார். சுந்தரராமசாமியின் *'செங்கமலமும் ஒரு சோப்பும்'* என்ற சிறுகதை. உலகமெங்கும் வியாதிக் கிருமிகள்; மயம். இலேசாகச் சொல்லிவிடலாம். நாலைந்து ஆண்டுகள்; இதைப்பற்றி ஆராய்ச்சி செய்துபட்டம் பெற்ற செங்கமலத்திற்கு அல்லவா அதன் பயங்கர விளையாட்டுகள் தெரியும். வியாதிக் கிருமிகளைப் பூதக்கண்ணாடி வழி சோதனை செய்து எண்ணிக் கணக்கிடுவது அவள் வேலை"[18] எனவும், சுந்தரராமசாமி யின் 'ரத்னாபாயின் ஆங்கிலம்' என்ற சிறுகதை, தில்லியிலிருந்து தன்உற்ற சிநேகியான அம்புஜம் சீனிவாசனுக்கு வழக்கம்போல் ரத்னாபாய் ஆங்கிலத்தில் ஒருகடிதம் எழுதினாள்."[19] எனவும் அமையும்; தொடக்கங்கள் கூற்றுமுறைத் தொடக்கங்க ளுக்குச் சான்றுகள் ஆகும். இதை நோக்குநிலை உத்தி என்றும் கூறலாம். கதையார்கூற்றில் சொல்லப்படுகின்றதோ அதுவே நோக்குநிலை உத்தியாகும்.

ஜெயமோகனின் 'அன்னை' என்னும் சிறுகதை, "குழந்தையின் சிணுங்கல் சாவித்தி ரியை எழுப்பியது. கண்களைத் திறக்காம லேயே கைகளை நீட்டினாள். துணிச்சுருள் கள் தான் சிக்கின. திடுக்கிட்டுக் கண் விழித்தான். நிலவொளியின் வெண்கதிர் மீது குழந்தை மிதந்து கொண்டிருந்து".[20] எனவும், பணத்திற்கு ஆசைப்பட்டுக் கற்பை இழக்கும் மனைவியைப் பற்றிய 'வேறுஒருவன்' என்னும் சிறுகதை, "திருவனந்தபுரத்துக்கு லாரி போகாது. ஸ்டிரைக் என்றார்கள். தேங்காய் வியாபாரிகள் யாரும் வரவில்லை. மூட்டையுடன் கொச்சப்பி உடனே திரும்பி விட்டான். மற்றவர்கள் சந்தையிலேயே படுத்துத் தூங்கிவிட்டுக் காலையில் வருகிறோம் என்றார்கள்."[21] என்றும் சுந்தர ராமசாமி, ஜெயமோகன் சிறுகதைகள் ஆசிரியர் கூற்றுக்களின் தொடங்குவது கூற்று முறைத் தொடக்கங்களுக்குச் சான்றுகள் ஆகும்.

### சிறுகதைத் தலைப்புக்கள்

ஒருசிறுகதைப் படைப்பின் வெற்றிக்குத் துணை செய்து கூடுதல்சிறப்பைத் தருவது சிறுகதையின் தலைப்பே ஆகும். ஆதலால், வாசகர்களின் கருத்தையும் சிந்தனையையும் தூண்டும் முறையில் சிறுகதைகளின் தலைப்புக்கள் அமையவேண்டும். இதனால் தான் மீனாட்சி முருகரத்தினம், "கற்போரது ஆர்வத்தைத் தூண்டுவதற்கும்; கதையைப்

படிக்கும்; விருப்பம் எழுவதற்கும் உதவுகின்ற முதற்கருவி தலைப்புத்தான் என்றார்."[22] சிறுகதை என்பது ஓர் அரிய கலைவேலைப் பாடு ஆகும். இதனை சு. வேங்கடராமன், "சிறுகதை சின்னஞ்சிறு குங்குமச் சிமிழிலில் செய்யும் வேலைப்பாடு என்பார் அகிலன். அந்த அழகிய வேலைப் பாட்டில் அரியதிறன் அக்கதையின் தலைப் பின் வாயிலாக வெளிப்படும்"[23] எனச் சிறுகதைத் தலைப்புக்களின் முக்கியத்துவத்தை விளக்கிக் கூறியுள்ளார். இந்தத் திறனாய்வுக் கருத்துக்களுக்கேற்பவே சுந்தரராமசாமி, ஜெயமோகன் ஆகியோரின் சிறுகதைத் தலைப்புக்கள் அமைந்துள்ளன.

## கதைமாந்தர் பெயர்களையே தலைப்புக் களாக அமைத்தல்

சிறுகதைகள் பொதுவாக ஒரு கதாபாத்திர த்தின் பண்பு அல்லது அவர்தம் வாழ்க்கை யின் ஒரு முக்கிய நிகழ்வைக் கதைப் பொருளாகக் கொண்டிருப்பதால் கதாபாத்தி ரங்களின் பெயர்களே சிறுகதைகளின் தலைப்புக்களாக அமைக்கப்படுகின்றன. இந்தவகையில் சுந்தரராமசாமியின் செங்கமல மும் ஒரு சோப்பும், பக்த துளசி, ஒரு நாய் ஒரு சிறுவன் ஒரு பாம்பு, முட்டைக்காரி, ரத்னாபாயின் ஆங்கிலம், காகங்கள், நாடார்சார், டால்ஸ்டாய் தாத்தாவின் கை, தனுவும், நிஷாவும், மறியா, தாமுவுக்கு எழுதிய கடிதம், ஈசல்கள், கொசுமுட்டை பேன் ஆகிய சிறுகதைகளின் தலைப்புக் களும், ஜெயமோகனின் மாடன் மோட்சம், இரணியன், நாகம், தேவகிச் சித்தியின் டைரி, அப்பாவும் மகனும், செண்பகயட்சி, திருமதி டென் ஆகிய சிறுகதைகளின் தலைப்புக் களும் கதைமாந்தர்களின் பெயர்களையே சிறுகதைகளின் தலைப்புக்களாகக் கொண்டி ருப்பது இதற்குத் தக்க சான்றுகளாகும்.

## குறியீடாக அமைந்த சிறுகதைத் தலைப்புக்கள்

சிறுகதையாசிரியர் தம் கதையில் கூறவரும் கருத்தை நேரடியாகக் கூறாமல் வேறொரு ஊடுபொருள் வாயிலாக வெளிப்படுத்துவதே குறியீட்டு உத்திமுறையாகும். ஏதேனும் ஓர் ஒற்றுமை காரணமாக ஒருபொருள் இன்னொரு பொருளைக் குறிப்பதே குறியீடாகும். இதனால்தான் தமிழண்ணல் (இராம.பெரியகருப்பன்) ஏதேனும் ஒரு பொருள் பிறிதொன்றை உட்கருத்தாய் உணர்த்துவது"[24] என்று குறிப்பிட்டுள்ளார். சிறுகதைப் படைப்பாளிகள் தம்கதைகளில் வெளிப்படையாகவும் நேரடியாகவும்; எந்தக் கருத்துக்களையும் கூறுவதில்லை. இலக்கியச் சுவைக்காக குறிப்பாகவும் மறைபொருளாக வும் குறியீடுகளையே பயன்படுத்துகின்றனர். இந்த வகையில் சிறுகதைத் தலைப்புக் களையே அவர்கள் குறியீடுகளாக அமைத்து ள்ளனர். சுந்தரராமசாமியின் கோவில்களை யும் உழவுமாடும், கிடாரி, சீதைமார்க் சீயக்காய்த்தூள், திரைகள் ஆயிரம், காலிப் பெட்டி, பல்லக்குத்தூக்கிகள், இரண்டு முகங்கள், காகங்கள், கதவுகளும்; சன்னல் களும், ஈசல்கள் ஆகிய சிறுகதைகளின் தலைப்புக்களும், ஜெயமோகனின் நதி, வீடு, பல்லக்கு, படுகை, வலை, வானம், போதி, மலம், நாகம், ரதம், வெள்ளம், நதிக்கரையில், காடேற்றம், விரிந்த கரங்களில், ஒரு கரியபறவையின் குரல், தேவதை, பசும்புல் வெளி, கூந்தல், சிலந்திவலையின்; மையம், சேறு, ஊசல், நச்சரவம் ஆகிய சிறுகதை களின் தலைப்புக்களும் குறியீட்டுத் தலைப்புக்களாக அமைந்துள்ளன.

## விரிவான ஆய்வுக்குப் பிற சிறுகதை உத்திகள்

சிறுகதைகளின் உரையாடல்; தொடக்கங்கள், கதாபாத்திரங்களின் மனவோட்டம் பற்றிய குறிப்புத் தொடக்கங்கள், மரபுநிலைத் தொடக்கங்கள், அறிமுகத் தொடக்கங்கள், சிறுகதைகளின் பல்வேறு வகையான முடிவு கள், கதைமாந்தர்; கூற்றுக்களில் சிறுகதை களை முடித்தல் கவிதைத் தொடர்களைச் சிறுகதைத் தலைப்புக்களாக அமைத்தல், கதைக்கருக்களும் கதைப்பின்னல்களும், நோக்கிநிலை உத்தி, மடல்வழிக் கூற்று பாத்திரப் படைப்பாக்கங்கள், உரையாடல் கள், முரண்கள், சிறுகதைப் படைப்புக் களின் பின்புலங்கள், மொழியாளுமை, மொழிநடை, உவமைகள், உருவகங்கள், பழமொழிகள், சொல்லாட்சிகள், வடமொழிச் சொற்கள், ஆங்கிலச் சொற்களும் தெடர்களும், இருமொழிக் கலப்பு நடை, வட்டார வழக்குச் சொற்களின் ஆளுமை, கொச்சைச் சொற்கள் எனப் பலவகையான சிறுகதை உத்திகள் சுந்தரராமசாமி, ஜெயமோகன் ஆகியோரின் சிறுகதைகளில் பரவலாகக் காணப்படுகின்றன. இந்த உத்திகள் விரிவான ஆய்வுகளுக்கு உட்பட்டவை.

## தொகுப்புரை

*“சுந்தரராமசாமி, ஜெயமோகன் சிறுகதைப் படைப்புக்களில் சிறுகதை உத்திகள்” என்னும் தலைப்பிலமைந்த இந்த ஆய்வுக் கட்டுரையில் உத்திகள் என்பதற்கான வியக்கங்கள், தமிழ்ச்சிறுகதைகளில் உத்திகள், சுந்தரராமசாமி, ஜெயமோகன் ஆகியோர் சிறுகதைகளின் தொடக்கங்கள், வருணனைத் தொடக்கங்கள், கூற்றுமுறைத் தொடக்கங்கள், சிறுகதைத் தலைப்புக்கள், கதைமாந்தர் பெயர்களையே தலைப்புக்களாக அமைத்தல், குறியீடுகளாக அமைந்த சிறுகதைத் தலைப்புக்கள் ஆகியன தக்கசான்றுகளுடன் செறிவாக ஆராய்ந்து விளக்கப்பெற்றுள்ளன.*

*காலத்தால் முற்பட்டவர் சுந்தரராமசாமி, பிந்தியவர் ஜெயமோகன், இருவரும்; நவீனத்துவ இலக்கியக் கொள்கைகள் சார்ந்த சிறுகதைப் படைப்பாளிகள் ஆவர். ஜெயமோகனிடம் சுந்தரராமசாமியின் தாக்கம் மிகுதியாகக் காணப்படுகின்றன. இருவர் சிறுகதைகளிலும்; கருத்து (உள்ளடக்கச் செய்திகள்) வடிவமைப்புக் கூறுகள், வெளியீட்டு உத்திகள் ஆகியன இலக்கியச் சிறப்புக்களுடன்; காணப்படுகின் றன. எனினும், சுந்தரராமசாமியின் சிறுகதை களில் சமுதாயச் சிந்தனைகளின் கூர்மையும், ஜெயமோகனிடம் இலக்கிய வெளியீட்டு உத்திகளின் நுண்மையும் தனிச்சிறப்புக் கூறுகளாக அமைந்துள்ளன.*

*இருவருடைய சிறுகதைப் படைப்புக்களும் தமிழ்ச்சிறுகதை வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்துள்ளன.*

## குறிப்புக்கள்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், நூற்பா, 1610.
2. நன்னூல், எழுத்ததிகாரம், பாயிரவியல், நூற்பா. 14.
3. க.த. திருநாவுக்கரசு, மு. வரதராசனாரின்; படைப்பிலக்கியம், பக். 195 - 196.
4. மேலது, ப. 198.
5. இ. மறைமலை, சிறுகதை உத்திகள், இரா. குருநாதன் (இதழாசிரியர்), கரந்தை மலர் 4, மருதம் பதிப்பகம், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர், 2002. ப. 11.
6. ந. பிச்சமுத்து, திறனாய்வும் தமிழ் இலக்கியக் கொள்கைகளும், ப. 4.
7. சி.சு.செல்லப்பன், வளரும் தமிழ், பக்.19-20.
8. சு.வேங்கடராமன், அகிலன்; சிறுகதைகள் ஒரு திறனாய்வு, ப. 154.
9. சுந்தரராமசாமி, சுந்தரராமசாமி சிறுகதை கள் முழுத்தொகுப்பு (2014) ப. 825.
10. மேலது, ப. 219.
11. ஜெயமோகன், ஜெயமோகன் சிறுகதைகள் முழுத் தொகுப்பு, உயிர்மை பதிப்பகம், (2004) ப. 432.
12. மேலது, ப. 190.
13. மா.இராமலிங்கம், நாவல் இலக்கியம், ப. 155.
14. சுந்தரராமசாமி சிறுகதைகள் முழுத் தொகுப்பு, ப. 403.
15. மேலது, ப. 17.
16. சுந்தரராமசாமி சிறுகதைகள் முழுத் தொகுப்பு (2017), ப. 66
17. மேலது, ப. 17.
18. சுந்தரராமசாமி சிறுகதைகள் முழுத் தொகுப்பு, (2017), ப. 107.
19. மேலது, ப. 447.
20. ஜெயமோகன் சிறுகதைகள் முழுத்தொகுப்பு, (2004) ப. 224.
21. மேலது, ப. 337.
22. மீனாட்சி முருகரத்னம், கல்கியின் சிறுகதைக்கலை, ப. 196.
23. சு.வேங்கடராமன், அகிலன் சிறுகதைகள் ஒரு திறனாய்வு, ப. 170.
24. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு, ப. 140.

**பயன்பட்ட நூல்கள்**

1. இளம்பூரணர் (உரை.ஆ.), தொல்காப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை, 2011.
2. இளவரசு, சோம. நுன்னூல் (முழுவதும்), மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2004.
3. இராமலிங்கம், மா. நாவல் இலக்கியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1972.
4. செல்லப்பன், சி.சு.வளரும் தமிழ், அருணோதயா பதிப்பகம், சென்னை, 1987.
5. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1985.
6. திருநாவுக்கரசு, க. த., மு. வரதராசனின் படைப்பிலக்கியம், பாரி நிலையம், சென்னை, 1984.
7. பிச்சமுத்து, ந., திறனாய்வும் தமிழ் இலக்கியக் கொள்கைகளும், சக்தி வெளியீடு, சென்னை, 1998.
8. மீனாட்சி முருகரத்னம், கல்கியின் சிறுகதைக்கலை, சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1976.
9. வேங்கடராமன், சு., அகிலன் சிறுகதைகள் ஒரு திறனாய்வு, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1977.
10. குருநாதன், இரா., கரந்தை மலர் - 4, மருதம் பதிப்பகம், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர், 2002.
11. சுந்தரராமசாமி, சுந்தரராமசாமி சிறுகதை கள் முழுத்தொகுப்பு, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2017.
12. ஜெயமோகன், ஜெயமோகன் சிறுகதை கள் முழுத் தொகுப்பு, உயிர்மை பதிப்பகம், சென்னை, 2004.